بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *07/08/2026* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

# ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இணையற்ற நன்றியுணர்வு

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔
بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நன்றியுணர்வின் தரம், அன்னாருடைய செயல் மற்றும் அறிவுரைகள் பற்றிய குறிப்பை மாநாட்டிற்கு முன்னதாக நான் எடுத்துரைத்திருந்தேன். இது தொடர்பாகவே இன்றும் நான் எடுத்துரைப்பேன்.

**அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவதன் பக்கம் கவனமூட்டும்போது மிகச் சிறிய விஷயத்திற்கும்கூட நன்றி செலுத்த வேண்டும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அறிவுறுத்தினார்கள். ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்**: "ஓர் அடியான் ஒரு கவளம் உணவு உண்ணும்போதோ அல்லது ஒரு மிடறு தண்ணீர் பருகும்போதோ அதற்காக அல்லாஹ்வைப் புகழ்ந்தால், அந்த அடியான் செய்யும் அந்தச் செயலால் அல்லாஹ் மகிழ்ச்சியடைகிறான் என்று ஹஸ்ரத் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்."

**ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்**: "ஒரு நாள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் வீட்டிற்குள் நுழைந்தபோது, ஒரு ரொட்டித் துண்டு கிடப்பதைக் கண்டார்கள். அன்னார் அந்த ரொட்டித் துண்டை எடுத்து சுத்தம் செய்து அதனை உண்டார்கள். பின்னர், ஆயிஷாவே! மரியாதைக்குரிய பொருளைக் கண்ணியப்படுத்துவீராக. இந்த ரிஸ்கின் (رزق) அருட்கொடை ஒரு சமுதாயத்தை விட்டு சென்றுவிட்டால், மீண்டும் அது அவர்களுக்குத் திரும்புவதில்லை என்று கூறினார்கள்."

எனவே, இது அன்னாருடைய நடைமுறையாக இருந்தது.

நமது ரிஸ்கில் பரக்கத் கிடைக்க வேண்டும் என்று நாம் விரும்பினால், அல்லாஹ் வழங்கியுள்ள மிகச் சிறிய பொருளுக்கும் நாம் அவனுக்கு நன்றி செலுத்த வேண்டும்.

**ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்**: "மக்கா வெற்றியின் நாளில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உம்மு ஹானி (ரலி) அவர்களின் வீட்டிற்குச் சென்றார்கள். அப்போது அன்னார் பசியோடு இருந்தார்கள். உமது வீட்டில் நாம் உண்பதற்கு ஏதேனும் பொருள் இருக்கிறதா

என்று அன்னார் கேட்டார்கள். அதற்கு அவர்கள், காய்ந்த ரொட்டித் துண்டுகளைத் தவிர என்னிடம் வேறு எதுவும் இல்லை; அதனை தங்களிடம் சமர்ப்பிக்க எனக்கு வெட்கமாக இருக்கிறது என்று கூறினார்கள். அதற்கு அன்னார், அதையே கொண்டு வாருங்கள் என்று கூறினார்கள். பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த காய்ந்த ரொட்டித் துண்டுகளை தண்ணீரில் போட்டு மென்மையாக்கினார்கள். ஹஸ்ரத் உம்மு ஹானி (ரலி) அவர்கள் உப்பைக் கொண்டு வந்தபோது, ஏதேனும் குழம்பு இருக்கிறதா என்று அன்னார் கேட்டார்கள். அதற்கு அவர்கள், சிறிது வினிகரைத் தவிர வேறு எதுவும் இல்லை என்று கூறினார்கள். அதற்கு அன்னார், அதையே கொண்டு வாருங்கள் என்று கூறினார்கள். அன்னார் அதனைத் தமது உணவில் ஊற்றி, அல்லாஹ்வைப் போற்றி புகழ்ந்து, வினிகர் எவ்வளவு சிறந்த குழம்பு! வினிகர் இருக்கும் வீடு ஏழ்மையடையாது என்று கூறினார்கள்."

இவைதான் ஹஸ்ரத் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் நன்றியுணர்வின் தரம்! நாம் இந்த வளர்ச்சியடைந்த நாடுகளில் வசிக்கிறோம்; அல்லாஹ்வின் எண்ணற்ற அருட்கொடைகளிலிருந்து பலன் பெறுகிறோம். இருந்தபோதிலும் அவனுக்கு நன்றி செலுத்தும் உரிமையை நிறைவேற்றுவதில்லை.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்**: "உங்கள் உடலில் எப்போதாவது கிழிந்த ஆடை இருந்தால் நீங்கள் அழத் தொடங்கி விடுகிறீர்கள்; 'எங்களுடைய தலைவிதி இப்படியா ஆகிவிட்டது! அணிந்து கொள்வதற்கு கிழிந்த துணிதான் எங்களுக்குக் கிடைத்திருக்கிறது' என்று கூறுகிறீர்கள். ஆனால், ஸஹாபிகளுக்குக் கிழிந்த ஆடை கிடைத்தாலும், (நன்றியுணர்வால்) அவர்களின் தலை அல்லாஹ்வுக்கு முன்னால் குனிந்துவிடும்....... நமது இறைவன் நமக்கு எவ்வளவு நல்ல ஆடையை வழங்கியுள்ளான் என்று அவர்கள் கூறுவார்கள். நான்கு நாட்களுக்குப் பிறகு அவர்களுக்கு காய்ந்த ரொட்டியின் ஒரு துண்டு கிடைத்தாலும், மகிழ்ச்சியினால் அவர்களின் கண்கள் மின்ன ஆரம்பிக்கும்; அவர்கள், அல்ஹம்துலில்லாஹ் (அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்) என்று கூறுவார்கள்."

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் ஜமாஅத் உறுப்பினர்களை நோக்கிக் கூறுகிறார்கள்**: "எந்த நோக்கத்திற்காக அல்லாஹ் உங்களைப் படைத்துள்ளான் என்ற உணர்வு உங்களுக்குள் ஏற்படாதவரை...... நீங்கள் என்ன (பணியைச்) செய்ய முடியும்? அல்லாஹ் உங்களை இந்த உயர்ந்த இடத்தில் நிறுத்தியதற்காக உங்கள் உள்ளம் எப்போதும் மகிழ்ச்சி அலைகளால் நிறைந்திருக்க வேண்டும்; உங்களிடம் எப்போதும் விழிப்புணர்வும் சுறுசுறுப்பும் தென்பட வேண்டும். இந்த விஷயம் உங்களுக்குள் தோன்றிவிட்டால், உடனே உங்களுக்குள் எத்தகைய ஆற்றல் உருவாகிவிடும் என்றால், மிகக் குறைந்த உணவே கிடைத்தாலும்கூட அது உங்களை உழைக்கத் தகுதியுள்ளவர்களாக மாற்றி விடும்."

பொதுவாக ஒவ்வோர் அஹ்மதியும், குறிப்பாக வாழ்வை அர்ப்பணித்தவர்கள், நன்றியுணர்வின் தரத்தை மேலும் உயர்த்திக் கொள்வதற்குப் பயன்படுத்த வேண்டிய வழிமுறை இதுதான்! இதற்கான தேவை மிகவும் அதிகமாக உள்ளது. அதேபோன்று, தங்களின் மனைவி மற்றும் குழந்தைகளிடையேயும் இந்த உணர்வை ஏற்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது.

ஏனெனில், வாழ்வை அர்ப்பணித்தவர்கள் எந்த நோக்கத்திற்காக தங்களை அர்ப்பணித்துள்ளார்களோ, அது மிகவும் மகத்தான நோக்கமாகும்; அந்த மகத்தான நோக்கத்தை அடைவதற்கு, மகத்தான நோக்கத்தை அடைந்தவர்களின் முன்மாதிரிகள் நமக்கு முன்னால் இருக்க வேண்டும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தண்ணீர் குடிக்கும்போது, பாத்திரத்திலிருந்து வாயை விலக்கி மூன்று மூச்சுகளில் தண்ணீர் குடிப்பார்கள்; ஒவ்வொரு மூச்சின்போதும் அல்லாஹ்வைப் புகழ்வார்கள். இறுதி மூச்சில் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவார்கள்.

*ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்களின் விரிவான அறிவிப்பு ஒன்றை ஸஹீஹ் புகாரியிலிருந்து ஹுஸூர் அவர்கள் எடுத்துரைத்தார்கள். அதில், ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் கடுமையான பசியின் காரணமாக வழியோரத்தில் அமர்ந்துகொண்டு கடந்து செல்பவர்களிடம், (பிறரிடம்) யாசிக்காமல் இருப்பவர்களின் தேவையை கவனிக்க வேண்டும் என்று கூறும் திருக்குர்ஆனின் வசனத்திற்குப் பொருள் கேட்பார்கள். ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) ஆகியோரிடம் அப்பொருளைக் கேட்டார்கள்; ஆனால் அவர்கள் ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்களின் நிலையைப் புரிந்து கொள்ளவில்லை. ஆனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அவ்வசனத்தின் பொருளை அவர்கள் கேட்டபோது, அன்னார் புன்னகைத்து, எனக்குப் பின்னால் வாருங்கள் என்று கூறினார்கள். பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்களுக்கு ஒரு கிண்ணம் பாலைக் கொடுத்தார்கள். அந்தப் பால் கிண்ணத்திலிருந்து திண்ணைத் தோழர்கள் பால் அருந்தினார்கள். அந்தச் சிறிய பால் கிண்ணத்தில் எந்தளவு பரக்கத் ஏற்பட்டது என்றால், அனைவரும் வயிறாரப் பாலை அருந்தினார்கள்; இருந்தபோதிலும் அக்கிண்ணத்தில் பால் எஞ்சியிருந்தது. அதற்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்தப் பால் கிண்ணத்தை எடுத்து, முதலில் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தினார்கள்; பின்னர் அந்த எஞ்சிய பாலை அருந்தினார்கள்.*

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமக்கு உதவி செய்தவர்களை எப்போதும் நினைவில் வைத்திருப்பார்கள்; மேலும், அவர்களின் நற்குறிப்பை மிக அழகிய முறையில் எடுத்துரைப்பார்கள். உதாரணமாக, ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களின் நற்குறிப்புகளை எப்போதும் எடுத்துக் கூறி வந்தார்கள். அதேபோன்று, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் சிறப்பையும் எப்போதும் அழகிய முறையில் எடுத்துரைப்பார்கள்.

முஸ்லிம்கள் மீது கொடுமைகள் இழைக்கப்பட்டபோது, அவர்கள் அபிசீனியாவை நோக்கி ஹிஜ்ரத் செய்தார்கள். அபிசீனிய மன்னர் நஜாஷி அம்மக்களுக்கு அடைக்கலம் வழங்கினார். ஹஸ்ரத் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அம்மன்னரின் இந்த உதவியை எப்போதும் நினைவில் வைத்திருந்தார்கள்; மேலும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அந்த நன்றியை எடுத்துரைத்தார்கள்.

கைபர் போருக்குப் பிறகு வழியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்களுடன் திருமணம் நடைபெற்றது. திருமண இரவில் ஹஸ்ரத் அபூ அய்யூப் காலித் பின் ஸைத் (ரலி) அவர்கள் இரவு முழுவதும் அன்னாருடைய கூடாரத்திற்கு வெளியே காவல் இருந்தார்கள். காலையில் அன்னார் விழித்தெழுந்தபோது ஹஸ்ரத் அபூ அய்யூப் (ரலி) அவர்கள் காவல் இருப்பதைக் கண்டார்கள். அவர்களின் தூய எண்ணத்தைக் கண்டு, அல்லாஹ்வே! அபூ அய்யூப் இரவு முழுவதும் என்னை எவ்வாறு பாதுகாத்தாரோ,

அதேபோன்று நீ அவரைப் பாதுகாப்பாயாக என்று அவர்களுக்காகத் துஆ செய்தார்கள்.

**ஹஸ்ரத் அம்ர் பின் அக்தப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்**: ஒருமுறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தண்ணீர் கேட்டார்கள். நான் அன்னாருக்குத் தண்ணீர் கொண்டு வந்தேன்; அதில் ஒரு முடி இருந்தது; நான் அம்முடியை அகற்றிவிட்டேன். "அல்லாஹ்வே! இவரை அழகாக்குவாயாக!" என்று அன்னார் எனக்காக துஆ செய்தார்கள்.

**ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்களுக்கு செல்வம் மற்றும் சந்ததியில் பரக்கத் ஏற்படுவதற்காக அன்னார் துஆ செய்தார்கள். ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்**: "என்னிடம் மிக அதிகமாக செல்வம் உள்ளது; மேலும், எனது பிள்ளைகள் மற்றும் பேரன் பேத்திகளின் எண்ணிக்கை இன்று நூறை எட்டியுள்ளது."

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அறிவுரை வழங்கியவாறு கூறினார்கள்**: "எவருக்கு உதவி செய்யப்படுகிறதோ, அவர் அதனை எடுத்துரைத்தால் அதற்கான உரிமையை நிறைவேற்றிவிட்டார்; எவர் அதனை மறைக்கிறாரோ அவர் அதற்கு நன்றி மறந்தவராகிறார்."

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்பளிப்புகளை ஏற்றுக்கொள்வார்கள்; மேலும் அதற்குப் பதிலாக அவர்களும் (அன்பளிப்பு) வழங்குவார்கள். **அன்னார் கூறினார்கள்**: "எவருக்கு அன்பளிப்பு வழங்கப்படுகிறதோ, அவருக்கு ஆற்றல் இருந்தால் அவர் அந்த அன்பளிப்புக்குப் பகரம் வழங்கட்டும்; ஆற்றல் இல்லையெனில், அன்பளிப்பு வழங்கியவரைப் புகழ்ந்து பேசட்டும்."

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இரவில் தொழுகையில் எந்தளவுக்கு நீண்ட நேரம் நிற்பார்கள் என்றால், அன்னாருடைய பாதங்களில் வெடிப்பு தோன்றி விடும். இதனைப் பார்த்து ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! அல்லாஹ் முந்தைய, பிந்தைய பாவங்களிலிருந்து தங்களை பாதுகாத்திருக்கும் நிலையில், தாங்கள் ஏன் இவ்வாறு செய்கிறீர்கள் என்று கேட்டார்கள். அதற்கு அன்னார், நான் நன்றியுள்ள அடியானாக ஆவதை விரும்ப வேண்டாமா என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொழுகைகளில் எந்தளவுக்கு அழுவார்கள் என்றால், எந்தளவுக்கு நின்று தொழுவார்கள் என்றால், அன்னாருடைய பாதங்கள் வீங்கிவிடும். தாங்கள் ஏன் இந்தளவுக்கு அழுது மன்றாடுகிறீர்கள் என்று ஸஹாபிகள் கேட்கும்போது, நான் என் இறைவனின் நன்றியுள்ள அடியானாக ஆகக்கூடாதா என்று அன்னார் கூறுவார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த நிலைமையானது, நாம் அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்கு நன்றி செலுத்துபவர்களாக இருந்து, நமது நன்றியுணர்வை உச்ச நிலைக்கு கொண்டு செல்ல வேண்டும் என்று நம்மிடம் எதிர்பார்க்கிறது. நன்றி செலுத்துவது என்பது சும்மா உட்கார்ந்து விடுவதன் பெயர் அல்ல; நன்றி செலுத்துவது என்பது நமது செயல்களில் மேலும் முன்னேற்றத்தை எதிர்பார்க்கிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறையச்சத்தின் மிக உயரிய நிலையில் இருந்தார்கள். எனவேதான் அன்னார், 'நன்றி செலுத்தும்

அடியார்' என்ற மிக உயர்ந்த தரத்தையும் அடைந்தார்கள். மேலும், அல்லாஹ்வின் உண்மையான அடியானாக இருக்கும் உரிமையை நீங்கள் நிறைவேற்ற விரும்பினால், நீங்களும் நன்றி செலுத்தும் அடியாராக மாறுங்கள். அல்லாஹ் உங்கள் மீது தனது அருள்களை அதிகரிக்க அதிகரிக்க, நீங்கள் உங்களது இறை வணக்கங்களின் தரத்தை உயர்த்தி (அதிகமாக) நன்றி செலுத்த வேண்டும் என்று நமக்கு வலியுறுத்தினார்கள்.

இறை அருட்கொடைகளின் விளைவாகச் சோம்பல் ஏற்படக் கூடாது; மாறாக, இறை வணக்கங்களின் மூலமாக மேலும் மேலும் முன்னேறிச் செல்ல வேண்டும்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள் ஓரிடத்தில் கூறுகிறார்கள்**: 'உன்னுடைய அருட்கொடைகளே என்னை வரம்பு மீறியவனாக ஆக்கிவிட்டன' என்று கூறியவன் மூடனாவான். அதாவது, அல்லாஹ்வின் அருட்கொடைகள்தான் என்னை நன்றி செலுத்துபவனாக ஆக்குவதற்குப் பதிலாக வரம்பு மீறியவனாக ஆக்கிவிட்டன (என்று கூறுபவன் மூடனாவான்). இறைவனின் அருள்கள் மனிதனை வரம்பு மீறியவனாக ஆக்குவதில்லை; அவன் கூறுவது தவறானதாகும்; அருள்கள் மனிதனை கிளர்ச்சியாளனாக ஆக்குவதில்லை; மாறாக, இன்னும் அதிகமாக நன்றி செலுத்துபவனாகவும் கீழ்ப்படிந்து நடப்பவனாகவும் ஆக்குகின்றன. எனவே! நீங்கள் முன்பை விட அதிகமாகக் கீழ்ப்படிந்து நடப்பவர்களாக மாறுங்கள். ஏனெனில், உங்களுக்கு வழங்கப்பட்டவற்றிற்கு நீங்கள் நன்றி செலுத்தினால், நான் உங்களுக்கு இன்னும் அதிகமாக வழங்குவேன் என்று அல்லாஹ் கூறுகிறான்.

அல்லாஹ் நம்மை உண்மையாக நன்றி செலுத்துபவர்களாகவும், உண்மையான முறையில் அவனை வணங்குபவர்களாகவும் ஆக்குவானாக; நாம் எப்போதும் அவனது அருளைப் பெறுபவர்களாக இருப்போமாக

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ
يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ
رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ
اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)